*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# சோழ மன்னர்களின் புலமைத்திறம்

**முனைவர் ஜெ. புவனேஸ்வரி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

## முன்னுரை

*இருபத்து நான்கு சோழ வேந்தரில் ஐவர் புலவராக விளங்குகின்றனர். மொத்த எண்ணிக்கையில் இது 21 விழுக்காடு ஆகும். சேரரையும், பாண்டியரையும் விட எண்ணிக்கையில் குறைவாக விளங்குவதைப் போலவே, புலவராக விளங்கும் சோழ வேந்தரும் குறைவாக உள்ளனர். சேரரையும் பாண்டியரையும் விட சோழர்களைப் பற்றிய செய்திகள் குறைவாகவே கிடைக்கின்றன.*

**குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்**

உறையூரை ஆண்ட சோழ வேந்தருள் சிறக்க வாழ்ந்தவன் கிள்ளிவளவன். அவன் வீரனாகவும், வள்ளலாகவும், நன்னெஞ்சம் கொண்ட வேந்தனாகவும் விளங்குகிறான். புரவலரைப் புலவர் வாழ்த்துவதே மரபு. ஆனால், புரவலனை வாழ்த்தும் புரவலனாகக் கிள்ளிவளவன் விளங்குகிறான். இவன் பாடிய பாடல் ஒன்றே. பாடாண்திணை அமைந்த அப்புறநானூற்றுப் பாடல் பண்ணனின் வள்ளன்மையைப் பகர்கின்றது.

காவிரிக் கரையில் சிறுகுடில் என்னும் ஊரில் பண்ணன் என்னும் வள்ளல் வாழ்ந்து வந்தான். இப்பண்ணனின் வள்ளல்தன்மையைக் கிள்ளிவளவன் பின்வருமாறு பாராட்டுகிறான். பழ மரத்திலே பறவையினம் ஒலித்தாற் போல ஊன் உண்பார் செய்யும் ஆரவாரம் கேட்கின்றது. எறும்புகள் முட்டைகளைக் கொண்டு மேட்டுநிலத்தை நோக்கிச் செல்வது போல, பெரிய சுற்றத்தோடும் கூடிய பிள்ளைகள், கையில் சோறு பெற்றுக் கொண்டு போகிறார்கள். இவ்வாறு எளியவருக்கும் வாரி வழங்கும் பண்ணனைப் பசிப்பிணி மருத்துவன் எனப் பாராட்டி அவனது இல்லத்தைப் பசிப்பிணி மருத்துவன் இல்லம் எனப் புகழும் அவனது பண்புடைமை போற்றத்தக்கது. பாராட்டுவதோடு அமையாது ,

'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய"[1]

என வாழ்த்துகிறான். தன் ஆட்சியின் கீழ் அமைந்த, சிறுகுடிப் பண்ணனை வாழ்த்தும் கிள்ளியின் பண்பு கருதத்தக்கது. தன்னைப் பல புலவர்கள் வாழ்த்தும் சிறப்பினைப் பெற்றிருந்த சோழன் வேறு ஒரு புரவலனைப் புகழ்ந்து வாழ்த்தும் சால்புடைமை குறிக்கத்தகும்.

மூவேந்தருள் புரவலனைப் புகழும் புரவலனாகக் கிள்ளிவளவன் விளங்குவதை அறிய முடிகிறது.

**கோப்பெருஞ்சோழன்**

இச்சோழன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவன். இவன் பாடியனவாகப் புறநானூற்றில் மூன்றும் (214, 215, 216), குறுந்தொகையில் நான்கும் (20, 53, 129, 147) ஆக ஏழு பாடல்கள் காணப்படுகின்றன. அவனைப் பாராட்டிய புலவர்கள் அனைவரும், இவனது ஆட்சிச்சிறப்பை விட, இவனது பண்பு நலத்தையே போற்றி உரைத்துள்ளனர். புலவர்கள் பெரிதும் விரும்பி இவனிடம் நட்பு பூண்டனர். அந்த உணர்ச்சி ஒத்த நட்பு அழியாத காவியம். அவன் வடக்கிருந்த பொழுது, புலவர் பலர் இவனுடன்

வடக்கிருந்து உயிர் துறந்தனர். புலவர்கள் தொடர்பால் இப்பெருவேந்தனும் பெரும்புலவனாக விளங்கினான். தன்னுடன் வடக்கிருக்கப் பிசிராந்தையார் வருவார் என உரைத்த புறப்பாடல்கள் இரண்டும்,[2] புலவர்பால் இவன் கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. இவன் உரைத்த உரை பொய்யாகா வண்ணம் வருகை தந்த புலவரின் செயலும் வியக்கத்தக்கது.

தன் மக்களின் மாறுபட்ட செய்கையினால், ஆட்சிப் பொறுப்பைத் துறந்தவன். வேந்தனாக ஆட்சிப் பொறுப்பை மட்டும் கவனியாத, புலவர்களிடம் பழகி வாழ்வியல் உண்மைகளையும் உணர்ந்தவன். யானை வேட்டைக்குச் சென்றவன் எளிதாக யானையைப் பெற்றுவிடலாம். குறும்பூழ் வேட்டைக்குச் சென்றவன் அது பெறாமலும் திரும்பலாம். எனவே. செய்த செயலின் பயனைப் பாராத உயர்ந்த குறிக்கோளுடையவராக விளங்க வேண்டும். அப்படி வாழ்ந்தால் நிலைத்த புகழைப் பெறலாம் என இவன் கூறும் அறிவுரை[3] உணரத்தக்க ஒன்றாகும்.

நுட்பமான மன உணர்வுகளை வெளிப்படுத்தும் அகத்துறையமைந்த பாடல்களையும் இவன் பாடியுள்ளான். கோப்பெருஞ் சோழனின் புலமை நலம் புலவர் பலரை அவனுக்கு நண்பராக்கிய செயலும் அவனது பண்புநலம் அவர்களை அவனுடன் வடக்கிருக்க வைத்த செயலும் வியக்கத்தக்கது.

**நல்லுருத்திரன்**

கலித்தொகையில் முல்லைக்கலியைப் பாடிய பெரும்புலவன் இவ்வேந்தன். முல்லைத்திணை குறித்த கலிப்பாக்கள் பதினேழும், ஒரு புறப்பாட்டும் இவன் பாடியவை. முல்லை நிலச் சிறப்புகளையும், பழக்கவழக்கங்களையும் சிறக்க எடுத்து விளக்கியுள்ளான். இவ்வேந்தன் இந்து சமயக் கடவுளர் பலரையும் அறிந்தவன். பாரதக் கதையினை நன்கு பயின்றவன் என்பதற்கு முல்லைக் கலிப்பாக்கள் சான்றளிக்கின்றன. மறப்பண்பை விரும்பும் மாண்புடையவன் என்பதை இவன் பாடிய முல்லைக்கலி விளக்குகிறது. ஏறு தழுவுதல் விழாக் காலத்தே தன்னைக் கைப்பற்றத் தவறி, தன்முன் விழுந்த ஆயர் இளைஞன் ஒருவனை முட்டித்தாக்க முனையாது மீளுகிறது காளை. போர்க்களத்தே வாள் பெற்றிருந்தும் வெற்றி கொளாது, தன் கையில் அகப்பட்ட வீரனை அவனது மறமின்மை காரணமாகக் கொள்ளாது உய்ந்து போக விடும் மறவனைக் காளைக்கு உவமை கூறியுள்ளான்.

‘கோள்வழுக்கித் தன்முன்னர்
வீழ்ந்தான்மேற் செல்லாது
மீளும் புகரேற்றுத் தோற்றங்காண்
மண்டமருள்
வாளகப் பட்டானை யொவ்வா
னெனப்பெயரு
மீளி மறவனும் போன்ம்”[4]

என்னும் முல்லைக்கலிப் பாடல் அக்கால வீரரின் பெருமிதத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

முற்றிய விளை வயலைக் கண்ணுற்றதும், பிறர் உழைப்பில் விளைந்த நெற்கதிர்களைத் திருடிச் சென்று, தன் வளையுள் சேர்க்கும் இயல்புடையது எலி. இவ்வாறு பிறர் செல்வத்தையும் தமக்கென இறுகப் பற்றிச் சேமித்துப் பதுக்கி வைத்து வாழும் இயல்புடையோர் பலர். போரிடும் போது கொடிய காட்டுப்பன்றி தன் இடப்பக்கத்தே வீழ்ந்தால் அதனை உண்ணாது பெரிய களிறு வலப்பக்கத்தே வீழுமாறு அதனை வீழ்த்திக் கொன்றுண்ணும் இயல்புடைய புலி போல், குறிக்கோள் மனம் கொண்டோர் உலகில் உள்ளனர். அவர்கள் உறுதியான உள்ளமும் கொள்கை உரமும் கொண்டவர்கள். கொண்ட கொள்கையிலிருந்து மாறுபட்டு நடப்பதால் வரும் பொருள் எப்படிப்பட்டதாக இருப்பினும், அதனை அவர்கள் விரும்ப மாட்டார்கள். அப்படிப்பட்ட மனவலிமையும், கொள்கை உரமும் கொண்டவர்களின் பழக்கமே வேண்டும்.

‘கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப
வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம்
படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையொ
டியைந்த வைக லுளவா கியரோ”[5]

என்னும் நல்லுருத்திரனின் குறிக்கோள் உள்ளம் கருதத்தக்கது. வேந்தனாக இருந்து ஆட்சி செய்தமையினால், தன்னைச் சுற்றியிருப்போரின் மன இயல்புகளை உணர்ந்தவன். எலி போன்ற மனம் படைத்தவரையும், புலி போன்ற மனம் படைத்தவரையும் ஆய்ந்து கண்டவன். எலி போன்ற மனம் படைத்திருப்பவர் வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடு சூழ்வர். எனவே. புலி போன்ற மனம் படைத்தவர் நட்பு தனக்கு வேண்டும் எனக் குறிப்பிடுகிறான் நல்லுருத்திரன்.

**நலங்கிள்ளி**

புகார் நகரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆட்சி புரிந்தவன்

நலங்கிள்ளி ஆவான். போர் பல கண்டு, போரின் கடுமையினையும், ஆட்சியின் அருமையினையும் நன்றாக உணர்ந்தவன். இவன் பாடிய இரண்டு புறநானூற்றுப் பாடல்கள், ஆட்சியின் அருமையையும், அதன் சிறப்பினையும் உணர்த்துவனவாய் அமைந்துள்ளன. மூத்தோரிடமிருந்து வழிவழியாக அடையப் பெறும் அரசுரிமை ஊழினால் தரப்பெறுவது என்றும், தன் வலிமையினால் அரசுரிமை பெறுபவனுக்கே ஆட்சி செலுத்துதல் எளிது என்றும் இவன் குறிப்பிடுகிறான்.

'மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
பாறர வந்த பழவிறற் றாயம்
எய்தின மாயி னெய்தினஞ் சிறப்பெனக்
குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்றாள்
விழுமியோன் பெறுகுவ னாயின் ஆழ்நீர்
அறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தா லம்ம தானே மையற்று
விசும்புற வோங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்த ரரசுகெழு திருவே

எனக் கிள்ளி உரைத்திருக்கும் கருத்துக்கள் சிறப்புடையனவாகும்.

வலிமையினால் ஆட்சியுரிமை எய்துவதை விரும்பும் கிள்ளி, தன் வலிமையை மதியாதாரை அழிக்க வஞ்சினம் கூறுகிறான். இவனுடைய வஞ்சினத்திலிருந்து இவன் வள்ளன்மையினையும், வீரத்தினையும், பண்புடையினையும் உணர முடிகிறது.

'கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போல"[7]

எனத் தன் பகைவன் அழியும் நிலையினை உவமை நலத்துடன் குறிப்பிடும் கிள்ளியின் புலமைத்திறம் குறிக்கத்தக்கது.

**மாவளத்தான்**

சோழன் நலங்கிள்ளியின் தம்பியாகக் கருதப்படுபவன் இம்மாவளத்தான். இவனும் தாமப்பல் கண்ணனார் என்னும் புலவரும் வட்டாடிய நிகழ்ச்சியினைப் புறநானூறு குறிப்பிடுகிறது. இவனது சான்றான்மையினைத் தாமப்பல் கண்ணனார் வியந்து போற்றுகின்றார். இவன் பாடிய குறுந்தொகைப் பாட்டொன்று இவனது அன்புள்ளத்தை வெளிப்படுத்துகிறது. பொருள்வயிற் பிரிவின் காரணமாகத் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியைத் தோழி தேற்றுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. நும் தலைவர் நம்மை ஈண்டே விடுத்துத் தாம் மட்டும் செல்லக் கருதுவராயின், அவர் நின் கண்களின்று வடியும் நீர், நின் மார்பகத்தை நனைப்பதைக் கண்டிலர். கண்டாராயின் அவர் நின்னைப் பிரிந்து செல்லார் எனும் பொருள் குறிப்போடு,

'தாமே செல்ப வாயிற் கானத்துப்
புலந்தேர் யானைக் கோட்டிடை யொழிந்த
சிறுவீ முல்லைக் கொம்பிற் றாயஅ்
இதழழிந் தூறுங் கண்பனி மதரெழிற்
பூணக வனமுலை நனைத்தலும்
காணார் கொல்லோ மாணிழை நமரே

என மாவளத்தான் பாடியுள்ளான்.

சோழ வேந்தர் ஐவரும் தம் புலமைத் திறத்தில் சிறந்து விளங்குகின்றனர். தன் நாட்டில் வாழும் பண்ணனை வாழ்த்திய கிள்ளிவளவனும், புலவர் பலரின் உள்ளமொத்த நட்பினைப் பெற்றிருந்த கோப்பெருஞ்சோழனும், முல்லைக்கலி பாடிய நல்லுருத்திரனும் குறிப்பிடத்தக்கவர்கள். தலைவியின் கண்ணீர் கண்டு செலவழுங்கும் தலைவனைப் படைத்த மாவளத்தானின் சான்றாண்மை கருதத்தக்கது. மானம் கருதி வஞ்சினம் உரைத்த, சோழன் நலங்கிள்ளியின் சொற்றிறன் மிகச் சிறப்பானது. சோழ வேந்தர் ஐவரும் கொள்கை உறுதியும் பண்பு மேம்பாடும் கொண்டோராய் விளங்குவதை, அவர்தம் பாடல்களிலிருந்து அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. புறம். 173 : 1
2. புறம். 215, 216
3. புறம். 214
4. கலி. 104 : 47 - 50
5. புறம். 190 : 6 - 12
6. மேலது. 75
7. மேலது. 73 : 9 - 10
8. குறுந். 348